Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளி ஜனவரி 17, 2025 | இதழ் 279

# நவி மும்பையில் இஸ்கானின் ஸ்ரீ ஸ்ரீ ராதா மதன்மோகன்ஜி கோவிலை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார்



சென்னை, 17 ஜனவரி 2025: நவி மும்பை, கார்கரில் ஸ்ரீ ஸ்ரீ ராதா மதன்மோகன்ஜி ஆலயத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இதுபோன்ற ஒரு தெய்வீக விழாவில் பங்கேற்பது தனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் என்றும், ஸ்ரீல பிரபுபாத சுவாமியின் ஆசிகளுடன் இஸ்கான் துறவிகளின் மகத்தான பாசத்தையும் அரவணைப்பையும் தாம் பெற்றுள்ளதாக கூறினார். மதிப்பிற்குரிய அனைத்து துறவிகளுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஆன்மீகம் மற்றும் அறிவின் முழுமையான பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் ஸ்ரீ ராதா மதன்மோகன்ஜி கோயில் வளாகத்தின் வடிவமைப்பு குறித்து அவர் எடுத்துரைத்தார். 'ஏகோ அஹம் பஹு சியாம்' என்ற கருத்தை வெளிப்படுத்தும் தெய்வீகத்தின் பல்வேறு வடிவங்களை இந்தக் கோயில் காட்சிப்படுத்துவதாக உள்ளது என்று அவர் மேலும் கூறினார். புதிய தலைமுறையினரின் ஆர்வம், விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில் ராமாயணம், மகாபாரதம் போன்ற காப்பியங்களை அடிப்படையாகக் கொண்ட அருங்காட்சியகம் கட்டப்பட்டு வருவதாகப் பிரதமர் குறிப்பிட்டார். கூடுதலாக, பிருந்தாவனத்தின் 12 காடுகளால் ஒரு தோட்டம் உருவாக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். இந்த கோயில் வளாகம் நம்பிக்கையுடன் இந்தியாவின் உணர்வையும் வளப்படுத்தும் புனித மையமாக உருவெடுக்கும் என்று திரு மோடி நம்பிக்கை தெரிவித்தார். இந்த உன்னத முயற்சிக்காக இஸ்கான் அமைப்பின் அனைத்து துறவிகள், உறுப்பினர்கள், மகாராஷ்டிர மக்களுக்கும் அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய கோபால கிருஷ்ண கோஸ்வாமி மகராஜை நினைவுகூர்ந்த திரு மோடி, பகவான் கிருஷ்ணர் மீதான அவரது ஆழ்ந்த பக்தியில் வேரூன்றியுள்ள மகாராஜின் தொலைநோக்குப் பார்வையும் ஆசிகளும் இந்தத் திட்டத்திற்கு கிடைத்துள்ளது என்று குறிப்பிட்டார். மகராஜ் நேரில் வரவில்லை என்றாலும், அவரது ஆன்மீக இருப்பு அனைவராலும் உணரப்பட்டதாக அவர் கூறினார். மகராஜின் அன்பு, நினைவுகள் தனது வாழ்க்கையில் பெற்றுள்ள சிறப்பான இடத்தை பிரதமர் எடுத்துரைத்தார். ஸ்ரீல பிரபுபாதரின் 125-வது பிறந்த நாளின் போது உலகின் மிகப்பெரிய கீதையை திறந்து வைக்க மகராஜால் அழைக்கப்பட்டதையும், அவரது வழிகாட்டுதலைப் பெற்றதையும் அவர் நினைவு கூர்ந்தார். மகராஜின் மற்றொரு கனவை நனவாக்கியதில் பிரதமர் திருப்தி தெரிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள இஸ்கான் அமைப்பை பின்பற்றுபவர்கள் கிருஷ்ணர் மீதான பக்தியால் ஒன்றுபட்டுள்ளனர் என்று கூறிய திரு மோடி, பக்தர்களுக்கு 24/7 என எப்போதும் வழிகாட்டுவதாக ஸ்ரீல பிரபுபாத சுவாமியின் போதனைகள் உள்ளன என்று எடுத்துரைத்தார். நாட்டின் சுதந்திரப் போராட்டத்தின் போது வேதங்கள், வேதாந்தம், கீதை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஸ்ரீல பிரபுபாத சுவாமி ஊக்குவித்ததாகவும், பக்தி வேதாந்தத்தை சாமானிய மக்களின் உணர்வுடன் இணைத்ததாகவும் பிரதமர் குறிப்பிட்டார். 70 வயதில், பெரும்பாலான மக்கள் தங்கள் கடமைகளை நிறைவேற்றியதாகக் கருதும் போது, ஸ்ரீல பிரபுபாத சுவாமி இஸ்கான் இயக்கத்தைத் தொடங்கி, உலகம் முழுவதும் பயணம் செய்து, பகவான் கிருஷ்ணரின் செய்தியை உலகின் அனைத்துப் பகுதிகளிலும் பரப்பியதாக அவர் கூறினார். அவரது அர்ப்பணிப்பால் இன்று உலகளவில் கோடிக்கணக்கான மக்கள் பயனடைகிறார்கள் என்று குறிப்பிட்ட பிரதமர், ஸ்ரீல பிரபுபாத சுவாமியின் தீவிர முயற்சிகள் நம்மை தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக தெரிவித்தார்.

# குடியரசுத் துணைத் தலைவர் கர்நாடகா பயணம்

சென்னை, 17 ஜனவரி 2025: குடியரசுத் துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், கர்நாடகாவில் ஒரு நாள் பயணம் மேற்கொள்கிறார். தனது பயணத்தின்போது, கர்நாடக மாநிலம் தார்வாடில் நடைபெறும் அமிர்த திருவிழா மற்றும் வேளாண் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சங்கக் கூட்டத்தில் குடியரசுத் துணைத்தலைவர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

குடியரசுத் துணைத்தலைவர் தனது பயணத்தின்போது, கர்நாடக மாநிலம் ஹுபாலி மாவட்டம் வரூருவில் உள்ள ஸ்ரீ நவக்கிரக தீர்த்தத் தலத்தில் சுமேரு பர்வதத்தையும் திறந்து வைக்கிறார்.

# செயற்கைக்கோள்களை விண்வெளியில் ஒருங்கிணைக்கும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் பாராட்டு

சென்னை, 17 ஜனவரி 2025: செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக நிலைநிறுத்தும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும், விண்வெளித் துறையினருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளிப் பயணங்களுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும் என்று கூறியுள்ளார். சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"செயற்கைக்கோள்களை ஒருங் கிணைப்பதை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ (@isro) விஞ்ஞானிகளுக்கும், ஒட்டுமொத்த விண்வெளித் துறையினருக்கும் வாழ்த்துகள். வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளி பயணங்களுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்."

# "வேலை வாய்ப்புகளின் எதிர்காலம் குறித்த கருத்தரங்கம்":மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா உரையாற்றினார்

சென்னை, 17 ஜனவரி 2025: மத்திய அரசின் தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், இந்திய தொழில் கூட்டமைப்புடன் (CII) இணைந்து, "நாளைய தொழிலாளர் சக்தியை வடிவமைத்தல்: மாறும் உலகில் வளர்ச்சிக்கான உந்துதல்" என்ற கருப்பொருளில் வேலை வாய்ப்புகளின் எதிர்காலம் குறித்த கருத்தரங்கை நேற்று (15.01.2025) புதுதில்லியில் நடத்தியது. இந்த முக்கிய நிகழ்வு கொள்கை வகுப்பாளர்கள், தொழில்துறை தலைவர்கள், நிபுணர்கள் ஆகியோரை இணைப்பதாக அமைந்தது.

இதில் உரையாற்றிய மத்திய தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, திறன் மேம்பாடு நமது முயற்சிகளின் மையமாக இருக்க வேண்டும் என்றார். புதுமைகளை ஊக்குவிப்பதன் மூலமும், உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலமும், உலகளாவிய திறன் கட்டமைப்பு உருவாக்கப்படுவதாக அவர் கூறினார். உலகளாவிய தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதில் இந்தியாவின் திறனையும் அவர் எடுத்துக்காட்டினார்.

தொழில் துறைக்கும், கல்வித் துறைக்கும் இணைப்புகளை வளர்ப்பதன் மூலம், இந்தியாவின் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்ப ஒரு திறன் கட்டமைப்பை உருவாக்க முடியும் என்று திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.



# கடந்த ஒன்பது ஆண்டுகளில், ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கத்தின் திட்டங்கள் எண்ணற்ற இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்து, அவர்களின் புதுமையான யோசனைகளை வெற்றிகரமான புத்தொழில்களாக மாற்றியுள்ளன.

சென்னை, 17 ஜனவரி 2025: ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கத்தின் ஒன்பதாண்டு நிறைவையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். கடந்த ஒன்பது ஆண்டுகளில், மாற்றத்துக்கான இந்த சிறந்த திட்டம் எண்ணற்ற இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்து, அவர்களின் புதுமையான யோசனைகளை வெற்றிகரமான புத்தொழில்களாக மாற்றியுள்ளது என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். அரசைப் பொறுத்தவரை, புத்தொழில் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது என்று திரு நரேந்திர மோடி மீண்டும் கூறியுள்ளார். ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கத்தின் இந்த வெற்றியானது இன்றைய இந்தியா ஆற்றல்மிக்க, நம்பிக்கை மிகுந்த, எதிர்காலத்திற்கு தயாராக உள்ள இந்தியா என்பதைப் பிரதிபலிக்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். புத்தொழில் உலகில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு இளைஞரையும் பாராட்டுவதாகவும் மேலும் அதிகமான இளைஞர்கள் இதில் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"புதுமை, தொழில்முனைவு, வளர்ச்சி ஆகியவற்றை சிறப்பாக மறுவரையறை செய்த ஒரு மைல்கல் முயற்சியான ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கத்தின் ஒன்பதாண்டு நிறைவை இன்று நாம் கொண்டாடுகிறோம். இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் சக்திவாய்ந்த வழியாக இது உருவெடுத்துள்ள நிலையில், இந்தத் திட்டம் எனக்கு மிகவும் பிடித்த முக்கியமான திட்டமாகும். கடந்த ஒன்பது ஆண்டுகளில், இந்த சிறந்த திட்டம் எண்ணற்ற இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்துள்ளது. அவர்களின் புதுமையான யோசனைகளை வெற்றிகரமான புத்தொழில்களாக மாற்றியுள்ளது."

"அரசைப் பொறுத்தவரை, புத்தொழில் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது. நமது கொள்கைகள் வர்த்தகம் செய்வதை எளிதாக்குதல், வளங்களை அதிக அளவில் அணுகுதல், ஒவ்வொரு கட்டத்திலும் தொழில் துறையினருக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகின்றன. நமது இளைஞர்கள் துணிச்சலுடன் செயல்பட்டு முடிவெடுப்பவர்களாக மாறுவதற்காக, புதிய கண்டுபிடிப்புகளையும் அதற்கான தொழில் பாதுகாப்பு மையங்களையும் நாங்கள் தீவிரமாக ஊக்குவித்து வருகிறோம். புத்தொழில் நிறுவனத்தினருடன் நான் தனிப்பட்ட முறையில் தொடர்ந்து உரையாடி வருகிறேன்."

"ஸ்டார்ட் அப் இந்தியா இயக்கத்தின் இந்த வெற்றியானது இன்றைய இந்தியா ஆற்றல்மிக்க, நம்பிக்கை மிகுந்த, எதிர்காலத்திற்கு தயாராக உள்ள இந்தியா என்பதை பிரதிபலிக்கிறது. இந்த பயணத்தை நாம் மேற்கொள்ளும் போது, ஒவ்வொரு கனவையும் மேம்படுத்தும் வகையில் தற்சார்பு இந்தியாவுக்கு பங்களிக்கும் ஒரு தொழில்முனைவோர் சூழல் அமைப்பை தொடர்ந்து வளர்த்தேடுப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் வலுப்படுத்துகிறோம். புத்தொழில் உலகில் உள்ள ஒவ்வொரு இளைஞரையும் நான் பாராட்டுகிறேன். மேலும் அதிகமான இளைஞர்கள் இதில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் நீங்கள் ஏமாற்றமடைய மாட்டீர்கள் என்பது என் நம்பிக்கை!"

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

## இந்திய ஆயுள் காப்பீட்டாளர்கள் சாதனை படைக்கும் புதிய வர்த்தக புள்ளி விவரங்களை டிசம்பர் ’24-ல் பதிவு செய்துள்ளனர்; ப்ரீமியம் கலெக்ஷன் 9.91% ஆக உயர்ந்துள்ளது

சென்னை, 17 ஜனவரி 2025: ஆயுள் காப்பீட்டு கவுன்சில் ஆனது புதுப்பிக்கப்பட்ட வர்த்தக புள்ளி விவரங்களை டிசம்பர் 2024 க்காக வெளியிட்டுள்ளது. இந்திய ஆயுள் காப்பீட்டாளர்கள், சாதனை படைக்கும் புதிய வர்த்தக புள்ளி விவரங்களை டிசம்பர் ’24-ல் பதிவு செய்துள்ளனர்; ப்ரீமியம் கலெக்ஷன் 9.91% ஆக உயர்ந்துள்ளது.

ஆயுள் காப்பீட்டு கவுன்சில் வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் ஆயுள் காப்பீட்டு துறையானது தனிநபர் பிரீமியங்கள் Y-o-Y அடிப்படையில் 13.52% வளர்ந்து டிசம்பர் '24-ல் ரூ. 4633.12 கோடியில் முடிந்தன மற்றும் YTD வளர்ச்சியானது 13.68% என்றளவில் இருந்தது. தனிநபர் ஒற்றையல்லாத ப்ரீமியங்கள் டிசம்பர் '24-ல் 4.53% உயர்ந்து ரூ.12467.51 கோடியாக வளர்ந்தன மற்றும் YTD வளர்ச்சியானது சென்ற ஆண்டு இதே காலகட்டத்தை விட அதிகமாக உயர்ந்து 14.53% என்றளவில் நிலவியது.

இந்த ஆற்றல் வாய்ந்த செயல்திறனுக்கு காரணமாக முதல் முறை ஆயுள் காப்பீடு பெறுபவர்களை ஆயுள் காப்பீட்டாளர்கள் அத்தியாவசிய ஆயுள் காப்பீட்டு தீர்வுகளை வாங்க ஊக்குவித்து வருவது மற்றும் அதனால் ஒருங்கிணைந்த ஒற்றை ப்ரீமியம் கலெக்ஷன்களில் டிசம்பர் '24-ல் 6.82% வளர்ச்சியும் YTD அடிப்படையில் 14.26% வளர்ச்சியுமே என்று கூறலாம்.

இந்தியாவில் ஆயுள் காப்பீட்டு தொழில்துறையானது காப்பீட்டுக்கான அணுகலை விரிவுபடுத்தியும் காப்பீட்டு தேவைகள் கொண்ட ஆனால் இதுவரை சேவை பெறாமலிருந்த பகுதிகளை சேர்ந்த மக்களை சென்றடையும் முயற்சிகளை மேற்கொண்டும் அபரிமிதமான முன்னேற்றத்தை பெற்று வருகிறது. இதன் அடிப்படையில், ஆயுள் காப்பீட்டாளர்கள் 757236 க்கும் அதிகமான தனிநபர் ஆயுள் காப்பீடு முகவர்களை பணியமர்த்தினர் மற்றும் இது ஒட்டுமொத்த முகவர் எண்ணிக்கையில் 3.46% வளர்ச்சியாகும். இன்னமும், முகவர் பணியமர்த்தலின் நிலையான வேகம் என்பது ஆயுள் காப்பீட்டாளர்களின் அதிவேக டிஜிட்டல் மயமாதலால் ஈடுசெய்யபட்டு காப்பீடு ஊடுருவலில் கூடுதல் லாபங்களுக்கு வழிவகுக்கிறது. இதன் மூலம் FY25 இலும் அதற்கப்பாலும் புது வர்த்தக ப்ரீமியங்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எதிர்பார்க்கலாம்.

## “கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி”

சென்னை, 17 ஜனவரி 2025: இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி மற்றும் நாமக்கல் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள் மறைந்ததை அறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

மிக நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட சுந்தரம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமல்லாது அதற்கு முன்பும் பல்வேறு நிலைகளில் பல பொறுப்புகளில் சிறப்பாக மக்கள் பணி ஆற்றி வந்தவர் ஆவார். 2021-ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்து, கொள்கை பரப்பு துணைச் செயலாளராகவும் சுந்தரம் அவர்கள் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினர், அரசியல் இயக்க நண்பர்கள், நாமக்கல் மாவட்ட மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கொடுங்கையூர் பகுதியில் சைக்கிளில் வந்த நபரிடம் வழிப்பறி செய்ய முயன்ற நபர் கைது.

சென்னை, 17 ஜனவரி 2025: சென்னை, சேலவாயல், வேதாந்த முருகப்ப தெருவில் வசித்து வரும் சண்முகம், வ/63, த/பெ. கண்ணன் என்பவர் பூமாலை கட்டும் தொழில் செய்து வருகிறார். இவர் 13.01.2025 அன்று மாலை கொடுங்கையூர், சின்னாண்டிமடம், கடும்பாடி அம்மன் கோயில் அருகே சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, அங்கு நின்று கொண்டிருந்த 2 நபர்கள் மேற்படி சண்முகத்தை வழிமறித்து, அவரிடமிருந்து ரூ.3,500/- அடங்கிய பணப்பையை பறிக்க முயன்றுள்ளனர். சண்முகம் சத்தம் போடவே, இருவரும் தப்ப முயன்ற போது, சத்தம் கேட்டு சற்று தொலைவில் இருந்த போலீசார் மற்றும் பொதுமக்கள் பணப்பையை பறிக்க முயன் 2 நபர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்து கொடுங்கையூர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர். இதுகுறித்து சண்முகம் பி-6 கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

பி-6 கொடுங்கையூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல்குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட மதன்குமார், வ/21, த/பெ.பழனிசாமி, எருக்கஞ்சேரி, சென்னை என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி மதன்குமார் மீது ஏற்கனவே ஒரு குற்றவழக்கு உள்ளது தெரிய வந்தது. தலைமறைவாக உள்ள மற்றொரு எதிரியை போலீசார் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரி மதன்குமார் விசாரணைக்குப் பின்னர் நேற்று (14.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

## திருவொற்றியூரில் பெட்ரோல் நிலையத்தில் பெட்ரோல் நிரப்பி விட்டு பணம் தராமல் தாக்கிய 2 நபர்கள் கைது.





சென்னை, 17 ஜனவரி 2025: சென்னை, திருவொற்றியூர், மேற்குமாட வீதியைச் சேர்ந்த கணபதி, வ/34 என்பவர், திருவொற்றியூர் தெற்குமாட வீதியில் பெட்ரோல் நிலையம் (பெட்ரோல் பங்க்) நடத்தி வருகிறார். கணபதி 05.01.2025 அன்று காலை, மேற்படி பெட்ரோல் நிலையத்தில் இருந்த போது, அங்கு 2 இருசக்கர வாகனங்களில் வந்த 3 நபர்கள் 1 இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு பணம் தராமல் செல்ல முயன்றனர். அப்போது பெட்ரோல் நிலைய ஊழியர் பெட்ரோலுக்கான பணத்தை கேட்ட போது, 3 நபர்களும் தகாத வார்த்தைகளால் பேசி மிரட்டல் விடுத்து செல்ல முயன்ற போது, கணபதி அவர்களிடம் பணம் கொடுத்து விட்டு செல்ல கூறிய போது, 3 நபர்களும் கணபதியை தாக்கி, கொலை மிரட்டல் விடுத்து அவர்களது இருசக்கர வாகனங்களில் தப்பிச் சென்றனர். இதுகுறித்து கணபதி ஹெச்-8 திருவொற்றியூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது, போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

ஹெச்-8 திருவொற்றியூர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.விக்னேஷ், வ/28, த/பெ.சாம்குமார், பாரதியார் அவென்யூ, சாத்தாங்காடு, திருவொற்றியூர், சென்னை, 2.பிரதீப், வ/30, த/பெ.தயாளன், கிரிஜா நகர், சாத்துமா நகர், திருவொற்றியூர், சென்னை ஆகிய 2 நபர்களை கைது செய்தனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய மற்றொரு தலைமறைவு எதிரியை போலீசார் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 14.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

## 2025ம் ஆண்டுக்கான தைவான் எக்ஸலன்ஸின் IMTEX கண்காட்சி பெங்களுருவில் நடைபெறவுள்ளது.




சென்னை, 17 ஜனவரி 2025: தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் இயந்திர கருவிகள் மற்றும் உற்பத்தி தொழில்நுட்பத்திற்கான முதன்மையான கண்காட்சியான IMTEX 2025 இல் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்த தைவான் எக்ஸலன்ஸ் தயாராகி வருகிறது. ஜனவரி 23 முதல் 29, 2025 வரை பெங்களூரு சர்வதேச கண்காட்சி மையத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள தைவான் எக்ஸலன்ஸ் நிகழ்வில், 13 முன்னணி தைவானிய நிறுவனங்களின் பங்கேற்புடன் இந்தியாவின் உற்பத்தித் துறையை மாற்றத் தயாராக உள்ள 17 அதிநவீன தொழில்நுட்பங்களை காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மிகவும் எதிர்பார்க்கப்படும் இந்த நிகழ்வு, புதுமையான தீர்வுகளின் காட்சிப்படுத்தலை விட இந்தியாவின் உற்பத்தித் துறையுடன் வலுவான கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான தைவான் எக்ஸலன்ஸின் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும். அதிநவீன உலோக செயலாக்க தீர்வுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், தைவான் எக்ஸலன்ஸ், இந்திய உற்பத்தியாளர்களுக்கு துல்லியம், செயல்திறன் மற்றும் நிலைத்தன்மையில் சிறந்து விளங்க தேவையான கருவிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது இரு நாடுகளுக்கும் புதுமை மற்றும் வளர்ச்சியின் பகிரப்பட்ட எதிர்காலத்தை நோக்கிய ஒரு படியாகும்.

கண்காட்சியின் தொடக்க நாளில் தைவான் எக்ஸலன்ஸின் தயாரிப்பு வெளியீட்டு அமர்வான "கிராஃப்டிங் எக்ஸலன்ஸ் ஃபார் எ புரோகிரஸிவ் டுமாரோ" இடம்பெறும், இது கெமர், கோசர், பல்மாரி, சிண்டெக், மற்றும் ஹைவின் போன்ற சிறந்த தைவானிய பிராண்டுகளின் மேம்பட்ட உலோக செயலாக்க தொழில்நுட்பங்களை வெளிப்படுத்துகிறது. முக்கிய தயாரிப்புகளில் இன்டெலிஜென்ட் 4.0 வழிகாட்டி, நீருக்கடியில் இயங்கும் சுழற்சி இயந்திரம், பல நிரல் மில் திருப்பம், சிஎன்சி கிரைண்டர் மற்றும் சிஎன்சி இயந்திர மையம் ஆகியவை அடங்கும்.

இந்நிகழ்வில் தொழில்துறை சங்கங்கள், நிறுவனங்கள், டீலர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் பார்வையாளர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்கள், தைவானிய கண்டுபிடிப்புகள் இந்தியாவின் உற்பத்தி நிலப்பரப்பில் எவ்வாறு புரட்சியை ஏற்படுத்தும் என்பதை விளக்கும் நேரடி செயல்விளக்கங்களில் ஈடுபடுவதை பார்வையாளர்கள் எதிர்நோக்கலாம்.

தைவானின் மிகவும் புதுமையான தயாரிப்புகளின் சாதனைகளை அங்கீகரித்து கொண்டாடுவதற்காக தைவானின் பொருளாதார விவகார அமைச்சகத்தால் 1993 ஆம் ஆண்டு தைவான் சிறப்பு விருதுகள் நிறுவப்பட்டன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, வடிவமைப்பு, தரம் மற்றும் சந்தைப்படுத்தல், தைவானில் தயாரிக்கப்பட்டது என்ற நான்கு முக்கிய காரணிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும், தகுதியான தயாரிப்புகள் தங்கள் தயாரிப்புகளை மதிப்பிடும் கடுமையான தேர்வு செயல்முறைக்கு உட்படுகின்றன. தைவானின் சிறப்பு விருதுகள் தரம் மற்றும் வடிவமைப்பின் மதிப்புமிக்க சின்னமாக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன, இது தைவானின் ஈர்க்கக்கூடிய தயாரிப்பு புதுமையை திறம்பட வெளிப்படுத்துகிறது.

## ஜாம்பஜார் பகுதியில் மாமியார் மற்றும் மனைவியை தாக்கிய நபர் கைது.

சென்னை, 17 ஜனவரி 2025: சென்னை, ஜாம்பஜார், பக்கீர்சாகிப், 3வது தெருவில் ரேவதி, வ/54,

க/பெ.தன்சிங் என்பவர் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். ரேவதியின் மகள் இளையவாணி, செல்வேந்திரன் என்பவரை திருமணம் செய்து மேற்படி ரேவதியின் வீட்டின் அருகில் குழந்தைகளுடன் வசித்து வந்துள்ளார். இளையவாணிக்கும், அவரது கணவர் செல்வேந்திரனுக்கும் அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு

வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 14.01.2025 அன்று மாலை ரேவதி, அவரது மகள் இளையவாணி மற்றும் பேரக்குழந்தைகளுடன் வெளியே சென்று விட்டு,

வீட்டிற்கு வந்த போது, அங்கு குடிபோதையில் நின்று கொண்டிருந்த செல்வேந்திரன், தனது மாமியார் மற்றும் மனைவியை தகாத வார்த்தைகளால் பேசி மாமியார் ரேவதியின் கன்னத்தில் தாக்கியுள்ளார். இதனை தடுக்க வந்த அவரது மனைவி இளையவாணியையும் காலால் எட்டி உதைத்து கீழே தள்ளி விட்டு, கத்தியைக்காட்டி கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து ரேவதி கொடுத்த புகாரின் பேரில் D-4 ஜாம்பஜார் காவல்

நிலையத்தில் ஙிழிஷி மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் (TNPHW Act) உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

D-4 ஜாம்பஜார் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல்

குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட செல்வேந்திரன், வ/45, த/பெ.மாரி, பக்கீர்சாகிப் தெரு, ஜாம்பஜார், சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து கத்தி பறிமுதல் செய்யப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி விசாரணைக்குப் பின்னர் 15.01.202 அன்று சிதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



## கொடுங்கையூர் பகுதியில் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை பதுக்கி வைத்து விற்பனை செய்த 2 நபர்கள் கைது. 80 மதுபாட்டில்கள் மற்றும் ரொக்கம் ரூ.7,000/- பறிமுதல்.

சென்னை, 17 ஜனவரி 2025: சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஆ.அருண், இ.கா.ப., அவர்கள் உத்தரவின் பேரில் சென்னை பெருநகர காவலில் சட்ட விரோதமாக மதுபாட்டில்களை விற்பனை செய்து வரும் நபர்களை தனிப்படை போலீசார் கண்டுப்பிடித்து கைது செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக அண்ணாநகர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் தனிப்படை போலீசார் 15.01.2025 அன்று கொடுங்கையூர், குப்பைமேடு அருகில் கண்காணித்து, அங்கு சட்ட விரோதமாக மதுபாட்டில்களைபதுக்கி வைத்து விற்பனை செய்த 1.கார்த்திக் (எ) பெண்ட் கார்த்திக், வ/30, த/பெ.பாலு, சர்மா நகர், வியாசர்பாடி, சென்னை 2.திருமுருகன், வ/56, த/பெ.தாஸ், வியாசர்பாடி, சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 180 மி.லி அளவு கொண்ட 80 மதுபாட்டில்கள் மற்றும் ரொக்கம் ரூ.7,000/- பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் எதிரி கார்த்திக் (எ) பெண்ட் கார்த்திக் மீது 2 வழக்குகளும், திருமுருகன் மீது 1 வழக்கு உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசரணைக்கப் பின்னர் 15.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற ளுத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.





"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# வாட்நகரில் உலகத்தரம் வாய்ந்த தொல்பொருள் அனுபவ அருங்காட்சியகம் - உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா திறந்து வைத்தார்

சென்னை, 17 ஜனவரி 2025: மத்திய கலாச்சார அமைச்சகம், குஜராத் மாநில அரசு ஆகிய இரண்டும் இணைந்து வாட்நகரில் அதிநவீன அருங்காட்சியகம் மற்றும் தொல்பொருள் விளக்க மையத்தை அமைத்துள்ளன. மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்ச்சியில் குஜராத் முதலமைச்சர் திரு பூபேந்திரபாய் படேல், மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் மற்றும் மூத்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த முக்கியத் திட்டமானது 2,500 ஆண்டுகளுக்கு முந்தைய பழங்கால நகரமான வாட்நகரின் துடிப்பான வரலாற்றை சிறப்புற எடுத்துரைக்கிறது. நவீன அருங்காட்சியகத்தின் சான்றான வாட்நகர் தொல்பொருள் அனுபவ அருங்காட்சியக வளாகத்தில் மூன்று முக்கிய கட்டமைப்புகள் உள்ளன.

வாட்நகரில் உள்ள தொல்பொருள் அனுபவ அருங்காட்சியகம் இந்தியாவில் அருங்காட்சியக வளர்ச்சிக்கு ஒரு புதிய அளவுகோலை உருவாக்கியுள்ளது. இது புதுமையான வடிவமைப்பு, அதிநவீன தொழில்நுட்பம், நமது பகிரப்பட்ட பாரம்பரியத்தைப் பாதுகாத்துக் காட்சிப்படுத்துவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றின் சக்தியை பிரதிபலிக்கிறது.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தமது உரையில், ஒட்டுமொத்த உலகமும் இப்போது பிரதமர் திரு நரேந்திர மோடியின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறது என்றார். இந்த அருங்காட்சியகம் உலக வரைபடத்தில் வாட்நகருக்கு முக்கிய இடத்தைப் பெற்றுத்தரும் என்றும் அவர் கூறினார். வாட்நகர் உலகின் பழமையான நகரங்களில் ஒன்றாகும் எனவும், இதன் பயணம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையானது என்றும் அவர் கூறினார்.

இந்தத் தொல்லியல் அனுபவ அருங்காட்சியகம் மற்றும் அகழ்வாராய்ச்சி வளாகத்தை மக்கள் கண்டிப்பாக பார்வையிட வேண்டும் என்று திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார். ஏனென்றால் வரலாறு, அகழ்வாராய்ச்சி ஆகியவை இவ்வளவு தனித்துவமான முறையில் இணைந்த வகையிலான வேறு எந்த அருங்காட்சியகமும் உலகில் இல்லை என்று அவர் தெரிவித்தார். சுமார் 300 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு உள்ள இந்த அருங்காட்சியகம், நாட்டின் கலாச்சாரத்தையும் உலக வரைபடத்தில் இடம்பெறச் செய்துள்ளது என்று திரு அமித் ஷா கூறினார்.

யோகாவையும் ஆயுர்வேதத்தையும் பிரபலப்படுத்தியதோடு இந்தியாவின் அனைத்து மொழிகளுக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி புத்துயிர் அளித்துள்ளதாக திரு அமித் ஷா தெரிவித்தார். பழங்குடி சமூகங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தலித்துகள், பெண்கள் ஆகியோரின் நலனில் இந்த அரசு அதிக அக்கறை செலுத்தி வருவதாக திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

'ாட்நகரின் வரலாறு எழுதப்படும்போது, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட பல சிறந்த சிந்தனையாளர்களின் பிறப்பிடமாக இது நினைவுகூரப்படும் என்பதில் சந்தேகமில்லை என்று உள்துறை அமைச்சர் கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையே வாட்நகரின் 2,500 ஆண்டுகால பயணத்தை அருங்காட்சியக வடிவில் பாதுகாத்து உலகிற்கு வழங்க வழிவகுத்துள்ளது என்று திரு அமித் ஷா தெரிவித்தார். வாட்நகரின் வரலாற்றை உலக வரைபடத்தில் வைப்பதில் இந்த அருங்காட்சியகம் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# செயற்கைக்கோள்களை விண்வெளியில் ஒருங்கிணைக்கும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் பாராட்டு

சென்னை, 17 ஜனவரி 2025: செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக நிலைநிறுத்தும் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கும், விண்வெளித் துறையினருக்கும் பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கருத்து தெரிவிக்கையில், வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளிப் பயணங்களுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும் என்று கூறியுள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: "செயற்கைக்கோள்களை ஒருங்கிணைப்பதை வெற்றிகரமாக செயல்படுத்திய இஸ்ரோ (@isro) விஞ்ஞானிகளுக்கும், ஒட்டுமொத்த விண்வெளித் துறையினருக்கும் வாழ்த்துகள். வரவிருக்கும் ஆண்டுகளில் இந்தியாவின் லட்சிய விண்வெளி பயணங்களுக்கு இது ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்."



# "மூன்றாவது ஏவுதளம்" அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை, 17 ஜனவரி 2025: பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், ஆந்திரப் பிரதேச மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் மூன்றாவது ஏவுதளம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மூன்றாவது ஏவுதளத் திட்டமானது ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் அடுத்த தலைமுறை செலுத்து வாகனங்களுக்கான ஏவுதள கட்டமைப்பை உருவாக்குவதோடு ஸ்ரீஹரிகோட்டாவில் இரண்டாவது ஏவுதளத்திற்கான ஆயத்த ஆதரவு ஏவுதளமாக செயல்படவும் செய்யும். இது எதிர்கால இந்திய மனித விண்வெளிப் பயணங்களுக்கான செலுத்துதல் திறனையும் மேம்படுத்தும். இந்த திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது.

செயல்படுத்தல் உத்தியும் இலக்குகளும்: டிஎல்பி எனப்படும் மூன்றாவது ஏவுதளமானது என்ஜிஎல்வி (NGLV) மட்டுமின்றி, எல்விஎம்3 (LVM3) வாகனங்களையும் செமிக்ரையோஜெனிக் நிலை, என்ஜிஎல்வியின் (NGLV-ன்) உள்ளமைவுகளையும் ஆதரிக்கக்கூடிய உலகளாவிய உள்ளமைவைக் கொண்டிருக்கும் வகையில் வடிவமைக்கப்படும். முந்தைய ஏவுதளங்களை நிறுவியதிலும், தற்போதுள்ள ஏவுதள வசதிகளை அதிகபட்சமாக பகிர்ந்து கொள்வதிலும் இஸ்ரோவின் அனுபவத்தை முழுமையாகப் பயன்படுத்தி, அதிகபட்ச தொழில்துறை பங்களிப்புடன் இது நிறைவேற்றப்படும். இது 4 வருட காலத்திற்குள் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

செ□லவு: ஏவுதளம் அமைப்பது, அதனுடன் தொடர்புடைய வசதிகள் என அனைத்திற்கும் மொத்த நிதி தேவை ரூ. 3984.86 கோடியாகும்.

அடுத்த 25-30 ஆண்டுகளுக்கு அதிகரித்து வரும் விண்வெளி போக்குவரத்துத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு, அதிக எடை கொண்ட அடுத்த தலைமுறை செலுத்து வாகனங்களுக்கு பயன்படும் வகையிலும் மூன்றாவது ஏவுதளத்தை விரைந்து அமைப்பது மிகவும் அவசியமாகும்.

# மயிலாப்பூர் பகுதியில் இருசக்கர வாகனம் மற்றும் செல்போனை திருடிய நபர் கைது. இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் மீட்பு.

சென்னை, 17 ஜனவரி 2025: சென்னை, மயிலாப்பூர், நொச்சி நகர் பகுதியில் வசித்து வரும் கௌதம், ஆ/வ.26, த/பெ.கர்ணன் என்பவர் தனியார் நிறுவனத்தில் சேல்ஸ்மேனாக வேலை செய்து வருகிறார். கௌதம் கடந்த 14.01.2025 அன்று இரவு அவரது வீட்டின் எதிரே புல்லட் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, இருசக்கர வாகனத்தின் சாவி மற்றும் செல்போனை தனது அருகில் வைத்துவிட்டு, வீட்டின் அருகே உள்ள மணற்பரப்பில் தூங்கியுள்ளார். பின்னர் கௌதம் நள்ளிரவில் எழுந்து பார்த்த போது அவரது இருசக்கர வாகனம் மற்றும் செல்போன் திருடுபோயுள்ளது தெரியவந்தது. இது குறித்து கௌதம் E-1 மயிலாப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். ணி-1 மயிலாப்பூர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்படி செல்போன் மற்றும் இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற விஸ்வா, ஆ/வ 20, த/பெ.செல்வம், நேருபார்க், ஹவுசிங் போர்டு, அம்பேத்கர் தெரு, சென்னை, என்பவரை கைது செய்தனர். மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட இளஞ்சிறாரிடம் போலீசார் விசாரணை செய்னர். அவர்களிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மற்றும் புல்லட் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது. கைது செய்யப்பட்ட எதிரி விஸ்வா விசாரணைக்குப் பின்னர் நேற்று (15.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார். இளஞ்சிறார் சிறார் நீதி ழுமத்தில் ஆஜர் செய்யப்பட்டு உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.



# கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை செயலாளராக திரு வினீத் ஜோஷி பொறுப்பேற்றார்

சென்னை, 17 ஜனவரி 2025: மத்திய கல்வி அமைச்சகத்தின் உயர்கல்வித் துறை செயலாளராக திரு வினீத் ஜோஷி புதுதில்லி சாஸ்திரி பவனில் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

திரு ஜோஷி பதவியேற்றதைத் தொடர்ந்து, அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த நியமனத்திற்கு முன், அவர் மணிப்பூரின் தலைமைச் செயலாளராக பணியாற்றினார். தேசிய தேர்வு முகமையின் தலைமை இயக்குநர், மத்திய இடைநிலைக் கல்வி வாரியத்தின் தலைவர், கல்வி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் உள்ளிட்ட கல்வித் துறையில் பல முக்கிய பதவிகளை அவர் வகித்துள்ளார்.

திரு ஜோஷி கான்பூர் ஐஐடியில் எந்திரப் பொறியியல் பட்டமும், வெளிநாட்டு வர்த்தகத்திற்கான இந்திய நிறுவனத்தில் எம்பிஏ பட்டமும் பெற்றுள்ளார்.



# காசி தமிழ்ச் சங்கமம் 3-ம் கட்ட பதிவிற்கான இணையதள சேவையை மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தொடங்கி வைத்தார்



சென்னை, 17 ஜனவரி 2025: மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், காசி தமிழ் சங்கமத்தின் 3-வது கட்டப் பதிவிற்கான இணையதளத்தை தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளரிடம் பேசிய அவர் இந்த 3-வது கட்ட காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்ச்சி 2025 பிப்ரவரி 15-ம் தேதி, உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் தொடங்கும் என்று அறிவித்தார். 10 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்வு 2025 பிப்ரவரி 24-ம் தேதி முடிவடையும். சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் kashitamil.iitm.ac.in என்ற இணையதளத்தில், 2025 பிப்ரவரி 1-ம் தேதி வரை பதிவு செய்து கொள்ளலாம் என்று அவர் கூறினார்.

கல்வி அமைச்சகத்தின் செயலாளர் திரு சஞ்சய் குமார், பத்திரிகை தகவல் அலுவலகத்தின் முதன்மை தலைமை இயக்குநர் திரு. திரேந்திர ஓஜா, உயர்கல்வித்துறை கூடுதல் செயலாளர் திரு சுனில் குமார் பர்ன்வால், பாரதிய பாஷா சமிதியின் தலைவர் திரு சாமு கிருஷ்ண சாஸ்திரி உள்ளிட்ட பிற உயரதிகாரிகளும் இந்த செய்தியாளர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் பேசிய திரு தர்மேந்திர பிரதான், தமிழகம் - காசி இடையேயான பிரிக்க முடியாத பிணைப்பு காசி தமிழ்ச் சங்கமம் 3-ம் கட்டத்தின் மூலம் மீண்டும் உயிர் பெறும் என்று கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் சிந்தனையில் உதித்த காசி தமிழ்ச் சங்கமம், தமிழ்நாடு - காசி இடையேயான காலத்தால் அழியாத பிணைப்பை கொண்டாடவும், நாகரிக தொடர்புகளை வலுப்படுத்தவும், ஒரே பாரதம், உன்னத பாரதம் என்ற உணர்வை மேம்படுத்தவும் உத்வேகம் அளிப்பதற்கான முயற்சியாகும் என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு, காசி தமிழ் சங்கமம் மகா கும்பமேளா நிகழ்ச்சியுடன் ஒன்று சேர்ந்து நடைபெறுவதால் தனிச் சிறப்பு முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது என்றும், அயோத்தியில் ஸ்ரீ ராம் லல்லாவின் 'பிராண பிரதிஷ்டாவுக்கு' பிறகு நடைபெறும் முதல் சங்கம நிகழ்ச்சி இது என்றும் திரு தர்மேந்திர பிரதான் கூறினார்.

காசி தமிழ்ச் சங்கமம் 3-வது கட்டத்தில் தமிழக மக்கள் முழு அளவில் பங்கேற்க வேண்டும் என்று திரு பிரதான் கேட்டுக் கொண்டார்.

அகத்திய முனிவரின் பல்வேறு பரிமாணங்கள், சுகாதாரம், தத்துவம், அறிவியல், மொழியியல், இலக்கியம், அரசியல், பண்பாடு, கலை, குறிப்பாக தமிழ்நாடு ஆகிய துறைகளில் அவர் அளித்த அளப்பரிய பங்களிப்புகள் குறித்த கண்காட்சி, கருத்தரங்குகள், பயிலரங்குகள், புத்தக வெளியீடு போன்றவையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# பாஷினி: பன்மொழிப் புத்தாக்கம் மூலம் மகா கும்பமேளாவில் மாற்றத்தை ஏற்படுத்துதல்

சென்னை, 17 ஜனவரி 2025:12 ஆண்டுகளுக்கு ஒருமுறை யாத்ரிகர்கள் கூடும் மகா கும்பமேளா, இந்தியாவின் கலாச்சார, ஆன்மீக மரபுகளின் உச்சத்தை பிரதிபலிக்கிறது. உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் 2025-ல் நடத்தப்படும் இது, பல்வேறு மொழி பின்னணியைச் சேர்ந்த லட்சக் கணக்கான மக்களை ஈர்க்கிறது. இதற்கு ஆதரவாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம், அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் தடையற்ற தகவல் தொடர்பு மற்றும் அணுகலை உறுதி செய்வதற்காக டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் கீழ் புத்தாக்க முயற்சியான பாஷினியை பயன்படுத்துகிறது. 11 இந்திய மொழிகளில் அணுகலை வழங்குவதன் மூலம், இந்த நிகழ்வில் தகவல்கள் பகிரப்படும் மற்றும் தகவல் பெறப்படும் முறை மாற்றியமைக்கப்படும். இதற்கு பாஷினி தயாராக உள்ளது.

மகா கும்பமேளாவில் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை அளவு மற்றும் மொழிப் பன்முகத்தன்மை காரணமாக தனித்துவ தகவல் தொடர்பில் சவால்கள் எழுகின்றன. தனது மேம்பட்ட பன்மொழி திறன்கள் மூலம் இந்தச் சவால்களை பாஷினி எதிர்கொள்கிறது:

நிகழ்நேர தகவல் பரப்புதல்: அறிவிப்புகள், நிகழ்ச்சி அட்டவணைகள், பாதுகாப்பு மற்றும் வழிகாட்டுதல்களை 11 இந்திய மொழிகளில் பெறுவதற்கு பாஷினி உதவுகிறது. யாத்ரிகர்கள், தங்கள் தாய்மொழியைப் பொருட்படுத்தாமல், நிகழ்வின் போது முக்கியமான தகவல்களை அணுக முடியும் என்பதை இது உறுதி செய்கிறது.

எளிமைப்படுத்தப்பட்ட வழிகாட்டி: மொழித் தடைகள் பெரும்பாலும் பெரிய கூட்டங்களில் வழிகாட்டுதலை சிக்கலாக்குகின்றன. பாஷினியின் பேச்சு-க்கு-உரை மற்றும் உரை-க்கு-பேச்சு கருவிகள், மொபைல் செயலிகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பன்மொழி சாட்போட், யாத்ரிகர்களுக்கு அவர்கள் விரும்பும் மொழியில் வழிகாட்டி, அவர்களின் அனுபவத்தை மேம்படுத்துகிறது.

அணுகக்கூடிய அவசர சேவைகள்: உதவி எண்கள், அவசர சேவைகளுக்கான பன்மொழி அணுகல் ஆகியவை பங்கேற்பாளர்கள் பாதுகாப்பான சூழலை பெற முடியும் என்பதை உறுதி செய்கிறது. உத்தரப்பிரதேச காவல்துறையுடன் இணைந்து, 112-அவசர உதவி எண்களுடனான தகவல்தொடர்புகளுக்கு பாஷினி உதவுகிறது.

மின்-ஆளுமையை செயல்படுத்துதல்: பாஷினியின் உதவியுடன், ஒழுங்குபடுத்துதல், வழிகாட்டுதல்கள் மற்றும் பொது சேவை அறிவிப்புகளை பலதரப்பட்ட பார்வையாளர்களுக்கு அதிகாரிகள் தெரிவிக்க முடியும். இது மென்மையான ஒருங்கிணைப்பை உறுதி செய்கிறது.

காணாமல் போவதும் கண்டறிவதும்: பாஷினியின் 'டிஜிட்டல் இழப்பு & தீர்வைக் கண்டறிதல்' ஒரு முக்கிய அம்சமாகும். இது பார்வையாளர்கள் தங்கள் சொந்த மொழியில் குரல் உள்ளீடுகளைப் பயன்படுத்தி இழந்த அல்லது கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை பதிவு செய்ய உதவுகிறது. நிகழ்நேர உரை மற்றும் குரல் மொழிபெயர்ப்புகள் தொடர்புகளை எளிதாக்குகின்றன.

பிரதமர் திரு நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட 'கும்ப் சஹாயக்' என்பது செயற்கை நுண்ணறிவால் இயங்கும், பன்மொழி, சாட்போட் ஆகும். இது மஹா கும்பமேளா 2025-ன் போது லட்சக் கணக்கான பார்வையாளர்களுக்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. யாத்ரிகர்களின் தகவல் மற்றும் வழிகாட்டுதல் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் புனித யாத்திரை அனுபவத்தை நிறைவு செய்வது இதன் நோக்கமாக உள்ளது. 'கும்ப் சஹாயக்' சாட்போட் அனைவருக்கும் தடையற்ற, நிகழ்நேர தகவல் மற்றும் வழிகாட்டுதல் உதவியை வழங்குகிறது. பாஷினியின் மொழிபெயர்ப்பு சேவை இந்தி, ஆங்கிலம் மற்றும் 9 இந்திய மொழிகளில் சாட்போட்டுக்கு உதவுகிறது.

பாஷினி, அல்லது இந்தியாவுக்கான பாஷா இடைமுகம் இந்தியாவின் பன்மொழிப் பயன்பாட்டுச் சூழலில் டிஜிட்டல் உள்ளடக்கம் மற்றும் சேவைகளுக்கான அணுகலை ஜனநாயகப்படுத்தும் ஒரு முன்னோடி முயற்சியாகும். தேசிய மொழிகள் மொழிபெயர்ப்பு இயக்கமாக, அதிநவீன செயற்கை நுண்ணறிவு மற்றும் இயற்கை மொழி செயலாக்கம் என்ற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மொழி இடைவெளியைக் குறைத்து, பயனர்கள் தாங்கள் விரும்பும் மொழியில் உள்ளடக்கம் மற்றும் சேவைகளை அணுக பாஷினி உதவுகிறது.

இந்தியாவை டிஜிட்டல் அதிகாரம் பெற்ற சமூகமாகவும், அறிவுசார் பொருளாதாரமாகவும் மாற்றும் டிஜிட்டல் இந்தியா தொலைநோக்கு பார்வையை பாஷினி உருவகப்படுத்துகிறது. மொழியியல் பன்முகத்தன்மையை பூர்த்தி செய்வதன் மூலம், இது டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கிறது. குடிமக்கள் கல்வி, சுகாதாரம், ஆளுகை மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை அவர்கள் விரும்பும் மொழியில் அணுக உதவுகிறது.

மகா கும்பமேளா 2025-ல் பாஷினியின் செயல்பாடு மொழி வேறுபாடுகளைக் குறைப்பதில் அதன் திறனுக்கு எடுத்துக்காட்டாகும். பாஷினி தொடர்ந்து மேம்பட்டு வரும் நிலையில், டிஜிட்டல் இந்தியா தொலைநோக்கு பார்வையை நனவாக்குவதில் அது முக்கிய பங்கு வகிக்கும் என்பதை உறுதிசெய்கிறது.

# ஜெர்மனியின் பிராங்க்பர்ட்டில் ஹெய்ம்டெக்ஸ்டில் 2025 ஜவுளி கண்காட்சியில் இந்திய அரங்கை ஜவுளி அமைச்சர் திறந்து வைத்தார்

சென்னை, 17 ஜனவரி 2025: மெஸ்ஸே பிராங்பேர்ட்டில் நடைபெறும் ஹெய்ம்டெக்ஸ்டில் 2025 ஜவுளி கண்காட்சியில் இந்திய அரங்கை மத்திய ஜவுளி அமைச்சர் திரு கிரிராஜ் சிங் திறந்து வைத்ததன் மூலம் ஜவுளித் துறையில் இந்தியா தனது வளர்ந்து வரும் வலிமையை வெளிப்படுத்தி உள்ளது. இந்த மதிப்புமிக்க உலகளாவிய வீட்டு ஜவுளி கண்காட்சியில் மிகப்பெரிய நாடாக பங்கேற்றதன் மூலம், புதுமை, நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய கூட்டாண்மைகளுக்கான தனது உறுதிப்பாட்டை இந்தியா நிரூபித்துள்ளது.

உலகளாவிய வீட்டு ஜவுளி ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் இடையே உரையாற்றிய அமைச்சர், இந்தியாவின் வளர்ந்து வரும் போட்டித்திறனை எடுத்துக் காட்டியும் நீடித்த வளர்ச்சியை அடைவதற்கு ஒத்துழைப்பின் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார். பாரத் டெக்ஸ் 2025-ல் பங்கேற்கவும், இந்தியாவின் செழிப்பான ஜவுளிச் சூழல் அமைப்பில் முதலீட்டு வாய்ப்புகளை கண்டறியவும் பங்கேற்றுள்ள அனைத்து நாடுகளுக்கும் அமைச்சர் அழைப்பு விடுத்தார். அவுளி மற்றும் இயந்திர உற்பத்தியாளர்களுடனான முதலீட்டாளர்கள் சந்திப்பின் போது, இந்தியாவின் வளர்ச்சி முறை மற்றும் கடந்த 10 ஆண்டுகளில் அதிகரித்து வரும் அந்நிய நேரடி முதலீடு ஆகியவற்றை எடுத்துரைத்த அமைச்சர், 'இந்தியாவில் தயாரியுங்கள்' முன்முயற்சி ஒரு போட்டி உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுப்பதற்கு ஊக்கம் அளிக்கும் நிரூபிக்கப்பட்ட திட்டமிடல் என்று குறிப்பிட்டார். வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு முதலீட்டாளர்களை ஊக்குவித்த அவர், இந்திய சந்தையில் இருந்து விலகி இருப்பது தவற விட்டுவிட்டோம் என்ற அச்சத்திற்கு வழிவகுக்கும் என்று எச்சரித்தார். உலக முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்த அவர், "இந்தியாவில் முதலீடு செய்ய வாருங்கள் - இந்தியாவில் உற்பத்தி செய்வோம், உலகத்திற்காக உருவாக்குவோம்" என்று கூறினார்.இந்த நிகழ்வில் தொழில்துறை தலைவர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். இது ஜவுளித் துறையில் உலகளாவிய தலைமைத்துவமாக தனது நிலையை வலுப்படுத்துவதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.அமைச்சர் தலைமையிலான இந்தியக் குழுவில், ஜவுளி அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திரு ரோஹித் கன்சால், ஜெர்மனியில் உள்ள இந்திய தூதரக மற்றும் அமைச்சகத்தின் பிற அதிகாரிகள் இருந்தனர். ஐந்து ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் மற்றும் சணல் வாரியத்தின் பிரதிநிதிகளும் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். இது பல்வேறு வகையான தயாரிப்புகளை காட்சிப்படுத்தி இருக்கிறது.

# ஐஎன்எஸ் சூரத், ஐஎன்எஸ் நீலகிரி, ஐஎன்எஸ் வாக்ஷீர் போர் கப்பல்களை அர்ப்பணித்த போது பிரதமர் ஆற்றிய உரை

சென்னை, 17 ஜனவரி 2025: மகாராஷ்டிர ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களே, மகாராஷ்டிரத்தின் பிரபலமான முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அவர்களே, அமைச்சரவையில் உள்ள எனது மூத்த சகாக்களே, திரு ராஜ்நாத் சிங் அவர்களே, மகாராஷ்டிர முதலமைச்சர் சஞ்சய் சேத் அவர்களே, துணை முதலமைச்சர் திரு ஏக்நாத் ஷிண்டே அவர்களே, அஜித் பவார் அவர்களே, ராணுவ தளபதி அவர்களே, கடற்படை தளபதி அவரகளே, அனைத்து கடற்படை சகாக்களே, மசகான் கப்பல் கட்டுமான நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து சக ஊழியர்களே, விருந்தினர்களே, பெண்கள் மற்றும் தாய்மார்களே.

ஜனவரி 15-ம் தேதி ராணுவ தினமாகவும் கொண்டாடப்படுகிறது. நாட்டைப் பாதுகாப்பதற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்த ஒவ்வொரு துணிச்சலான ராணுவ வீரருக்கும் நான் மரியாதை செலுத்துகிறேன். இந்த நாளில் பாரத அன்னையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு துணிச்சலான ஆண்களையும், பெண்களையும் நான் வாழ்த்துகிறேன்.

இந்தியாவின் கடல்சார் பாரம்பரியம், கடற்படையின் புகழ்பெற்ற வரலாறு மற்றும் தற்சார்பு இந்தியா இயக்கம் ஆகியவற்றுக்கு இன்று முக்கியமான ஒரு நாளாகும். சத்ரபதி சிவாஜி மகராஜ் இந்திய கடற்படைக்கு புதிய பலத்தையும், புதிய பார்வையையும் அளித்துள்ளார். அவரது புனித பூமியான இன்று, 21-ம் நூற்றாண்டின் கடற்படையை வலுப்படுத்த நாம் பெரிய அடியை எடுத்து வைக்கிறோம். ஒரு பேரழிவை ஏற்படுத்தும் கப்பல், ஒரு போர்க்கப்பல், ஒரு நீர்மூழ்கி கப்பல் ஆகியவை ஒன்றாக அர்ப்பணிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும். மிகவும் பெருமைக்குரிய விஷயம் என்னவென்றால், இந்த மூன்று முன்னணி கப்பல்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை. நான் பாரதக் கடற்படையையும், அவர்களது கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து சக ஊழியர்களையும், பொறியாளர்களையும், தொழிலாளர்களையும், ஒட்டுமொத்த நாட்டையும் பாராட்டுகிறேன்.

இன்றைய நிகழ்ச்சி நமது புகழ்பெற்ற பாரம்பரியத்தை எதிர்கால விருப்பங்களுடன் இணைக்கிறது. நீண்ட கடல் பயணங்கள், வர்த்தகம், கடற்படை பாதுகாப்பு, கப்பல் தொழில் ஆகியவற்றில் நமக்கு வளமான வரலாறு உள்ளது. அதன் வரலாற்றிலிருந்து உத்வேகம் பெற்று, இன்றைய இந்தியா உலகின் ஒரு பெரிய கடல்சார் சக்தியாக மாறி வருகிறது. இன்று அர்ப்பணிக்கப்பட்டுள்ள கப்பல்களும் இதைத்தான் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, நமது நீலகிரி கப்பல் சோழ வம்சத்தின் கடல் சக்திக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. குஜராத் துறைமுகங்கள் மூலம் மேற்கு ஆசியாவுடன் இந்தியா இணைக்கப்பட்டிருந்த காலகட்டத்தை சூரத் போர்க்கப்பல் நமக்கு நினைவூட்டுகிறது. இந்த நாட்களில், இந்த இரண்டு கப்பல்களுடன், வாக்ஷீர் நீர்மூழ்கிக் கப்பலும் இன்று இயக்கப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு, பி75 ரக நீர்மூழ்கிக் கப்பலான கல்வாரியை இயக்கி வைக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த வகையின் ஆறாவது நீர்மூழ்கிக் கப்பலான வாக்ஷீரை அர்ப்பணிக்கும் வாய்ப்பு இன்று எனக்கு கிடைத்தது. இந்தப் புதிய கப்பல்கள் இந்தியாவின் பாதுகாப்பு, முன்னேற்றம் ஆகிய இரண்டிற்கும் புதிய பலத்தை அளிக்கும்.

இன்று, உலகம் முழுவதும், குறிப்பாக தென்பகுதியில் நம்பகமான, பொறுப்பான கூட்டாளியாக இந்தியா அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவானது வளர்ச்சி உணர்வில் செயல்படுகிறது, விரிவாக்க உணர்வுடன் இல்லாமல், வெளிப்படையான, பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான இந்திய-பசிபிக் பிராந்தியத்தை இந்தியா எப்போதும் ஆதரித்து வந்துள்ளது. எனவே, கடலை ஒட்டியுள்ள நாடுகளின் வளர்ச்சி என்று வரும்போது, சாகர் என்ற தாரகமந்திரத்தை இந்தியா வழங்கியுள்ளது. சாகர் என்றால் இந்த மண்டலத்தில் உள்ள அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி என்று அர்த்தம். சாகர் என்ற தொலைநோக்குப் பார்வையுடன் நாங்கள் முன்னேறினோம். ஜி-20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் பொறுப்பு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டபோது, ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற தாரக மந்திரத்தை உலகிற்கு அளித்தோம். கொரோனாவை எதிர்த்துப் போராடும் போது உலகம் சோர்வடைந்து கொண்டிருந்தபோது இந்தியா, ஒரே பூமி ஒரே ஆரோக்கியம் என்ற தொலைநோக்குப் பார்வையை வழங்கியது. உலகம் முழுவதையும் நமது குடும்பமாக கருதுகிறோம். அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம் என்ற கொள்கையில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே, இந்த ஒட்டுமொத்த பிராந்தியத்தின் பாதுகாப்பை தனது பொறுப்பாக இந்தியா கருதுகிறது.

உலகளாவிய பாதுகாப்பு, பொருளாதாரம் மற்றும் புவிசார் அரசியல் இயக்கவியலை வடிவமைப்பதில், இந்தியா போன்ற ஒரு கடல்சார் நாடு பெரும் பங்கு வகிக்கப் போகிறது. பொருளாதார முன்னேற்றம் மற்றும் எரிசக்தி பாதுகாப்பிற்கு, பிராந்திய நீர்நிலைகள் பாதுகாக்கப்படுவதும், கப்பல் போக்குவரத்து சுதந்திரம் உறுதி செய்யப்படுவதும், வர்த்தக வழங்கல் வழிகள் மற்றும் கடல் வழிகள் பாதுகாப்பாக இருப்பதும் முக்கியம். பயங்கரவாதம், ஆயுதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தலில் இருந்து இந்த முழு பிராந்தியத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். ஆகையால், கடல்களை பாதுகாப்பாகவும், வளமாகவும் மாற்றுவதில் நாம் உலகளாவிய கூட்டாளிகளாக மாறுவது தற்போது முக்கியம். அரிய கனிமங்கள், மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரினங்கள் தவறாகப் பயன்படுத்தப்படாமல் தடுக்கும் திறனை வளர்த்து அவற்றை நிர்வகிப்போம். புதிய கப்பல் வழிகள் மற்றும் தகவல்தொடர்பு கடல் பாதைகளைக் கண்டுபிடிப்பதில் நாம் முதலீடு செய்கிறோம். தற்போது இந்தியா இந்த திசையில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை எடுத்து வருவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஒட்டுமொத்த இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் முதல் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது. கடந்த சில மாதங்களிலேயே நமது கடற்படை நூற்றுக்கணக்கான உயிர்களைக் காப்பாற்றியுள்ளது, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள தேசிய மற்றும் சர்வதேச சரக்குகளைப் பாதுகாத்துள்ளது. இது இந்தியா மீதான உலக நாடுகளின் நம்பிக்கையை அதிகரித்துள்ளது. உங்கள் அனைவராலும் அது அதிகரித்துள்ளது, அதனால்தான் இன்று உங்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படை மீதான நம்பிக்கையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது ஆசியான், ஆஸ்திரேலியா, வளைகுடா அல்லது ஆப்பிரிக்க நாடுகளுடன் இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்ந்து வலுவடைந்து வருவதை நீங்கள் காணலாம். இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இந்தியாவின் நிலையும், அதன் வலிமையும் இந்த உறவுகளை வலுப்படுத்துவதற்கு மிகப் பெரிய அடிப்படையாகும். அதனால்தான் இன்றைய நிகழ்வு ராணுவக் கண்ணோட்டத்திலும், பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் சம அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

என்னுடன் இணைந்து உரக்க கூறுங்கள்.

பாரத அன்னை 'ழ்க!!!